# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூன் 1, 2019 Weekly E-paper • JUNE 1, 2019





# மோடியின் அரசியல் நாகரிகம்

பொள்ளாச்சி மா.உமாபதி

## இன்று இஸ்ரேல், நாளை தமிழகம்?

தலையங்கம்





## பார்ப்பன அமைச்சரவை

மா.உதயகுமார்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஜூன் 1, 2019 Weekly E-paper ● JUNE 1, 2019

# மோடியின் அரசியல் நாகரிகம்

## எட்டிமரத்தில் எப்படி மாம்பழம் காய்க்கும்?

● பொள்ளாச்சி மா.உமாபதி

2019 நாடாளுமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணி தமிழ்நாட்டைப்பொறுத்தவரையில் பெரும் வெற்றியினை ஈட்டி உள்ளது. 1971ஆம் ஆண்டு தேர்தலுக்கும், இந்த 2019ஆம் ஆண்டு தேர்தலுக்கும் இரு பெரு ஒற்றுமைகள் உள்ளன. ஒன்று, அந்தத் தேர்தல் அறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்குப்பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் கண்ட முதல் தேர்தல். இது நமது அருமைத் தலைவர் கலைஞர் அவர்களின் மறைவுக்குப் பின்னால், இளைய கலைஞர் தளபதி அவர்களின் தலைமையில் கழகம் காணும் முதல் தேர்தல். இரண்டாவது, அந்தத் தேர்தலின் போது தந்தை பெரியார் ராமன் படத்தைச் செருப்பால் அடித்தார் என்று கூறி, "ராமனைச் செருப்பால் அடித்தவர்களுக்கா உங்கள் வாக்கு?" என்ற முழக்கத்தை முன்வைத்து துக்ளக்கும், காங்கிரசும் கடுமையாகப் பரப்புரை செய்தன. ஆனால் அப்போது மக்கள் அவர்களின் பரப்புரைகளை ஒதுக்கித் தள்ளி, கழகக் கூட்டணிக்குப் பெரும்பான்மை வெற்றியைத் தந்தனர். அதுபோல் இந்தத் தேர்தலிலும், தேர்தல் பரப்புரைக்குச் சம்பந்தம் இல்லாமல், பெரியார் திடலில் தமிழர் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் பேசிய ஒரு பேச்சை முதன்மைப் படுத்தி, "கிருஷ்ணனை இழிவுபடுத்தியவர்களுக்கா உங்கள் வாக்கு?" என்று பரப்புரை செய்தனர் அதே துக்ளக்கும், பாஜகவும். இப்போதும் தமிழக மக்கள் அவர்களது பரப்புரைகளை ஒதுக்கித் தள்ளி கழகக் கூட்டணிக்கு மகத்தான வெற்றியைத் தந்துள்ளனர். ஆனால் அந்த வெற்றியை மகிழ்ச்சியோடு கொண்டாட முடியாத நிலையில் மத்தியில் காங்கிரஸ் கட்சி எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. நாமெல்லாம் எதிர்பாராத வகையில் பாஜக பெரும் வெற்றியைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது.



“ நமது பிரதமருக்கு நட்பு சூழலும் அமைதியும் இருப்பதை விட , போர்ச்சூழலும் கலவரமும் தான் வேண்டி இருக்கிறது. இது மிகவும், ஆபத்தான போக்கு ”

மீண்டும் நரேந்திரமோடி பிரதமராகி விட்டார். பிரதமரும், அவரது அமைச்சரவையும் மே 30 அன்று பதவி ஏற்றனர். பதவி ஏற்பு விழாவுக்குப் பிரதமர் மோடி, அண்டை நாடுகளின் பிரதமர்களை எல்லாம் அழைத்திருந்தார். ஆனால் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை அழைக்கவில்லை. கேட்டால், அவர் எதிரி நாட்டின் பிரதமர் என்கின்றனர். ஆனால் அவர்தான் தேர்தலுக்கு முன் பாகிஸ்தானுக்குள் குண்டு போட்டு அவர்களிடம் மாட்டிக்கொண்ட அபிநந்தன் என்னும் விமானப்படைக் கமாண்டரை இந்தியா கேட்டுக்கொள்ளாமலேயே நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்தார் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான். அவ்வாறு நல்லெண்ண சைகையை வெளிப்படுத்திய சூழலில் அவரையும் அழைத்திருக்க வேண்டும். அது இரு நாடுகளுக்கும் இடையில் இருக்கும் பகையைக் குறைத்து, நட்புச் சூழல் உருவாக வாய்ப்பளித்திருக்கும். ஆனால் நமது பிரதமருக்கு நட்புச் சூழலும் அமைதியும் இருப்பதை விட , போர்ச்சூழலும் கலவரமும்தான் வேண்டி இருக்கிறது.

## முன்பக்கத் தொடர்ச்சி

இது மிகவும் ஆபத்தான போக்கு.

அதைப்போலவே, நமது நாட்டுக்குள் இருக்கும் அனைத்துக்கட்சித் தலைவர்களையும் அழைத்து இருக்கவேண்டும். அதையும் செய்யவில்லை. குறிப்பாக, தமிழகத்தில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரை அழைத்திருக்க வேண்டும். அதுதான் மரபு, ஆங்கிலத்தில் சொன்னால் *PROTOCOL*. அதை கிஞ்சிற்றும் மதிக்காமல் பதவி ஏற்பு விழா நடத்தியுள்ளார். நாம்,ஒன்றும், கொளத்தூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் மு.க.ஸ்டாலினை அழைக்கவேண்டும் என்று கூறவில்லை. மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சியான திமுகவின் தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்களை அழைக்க வேண்டும் என்று கூறுகிறோம்.. அவர்கள் அழைக்காததால் நமது தலைவருக்கு எதுவும் குறைந்துவிடப் போவதில்லை.ரோஜாவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் ரோஜா ரோஜாதான். கேட்டால் பாஜகவினர், அப்படி எல்லோரையும் அழைக்க வேண்டும் என்று சட்டமில்லை. என்கின்றனர். இதற்கெல்லாம் சட்டம் எதுவும் சொல்லாது, ஆனால் மரபுகளைப் பாதுகாக்க வேண்டும் என்கிற எண்ணம் பிரதமருக்கு இருந்திருக்க வேண்டும்.

அதே சமயம் ரஜினிகாந்த், ஜக்கி வாசுதேவ் போன்றோரை அழைத்துள்ளார். அவர்களை அழைத்தது தவறு என்று சொல்லவில்லை .அழைத்து விட்டுப் போகட்டும். எவ்வளவு இறுக்கிப் பிடித்தாலும் நழுவிப்போகும் ரஜினிகாந்தை எப்படியாவது தங்கள் வலையில் விழ வைக்க அவர்களும் ‘பிரம்மப் பிரயத்தனம்’ செய்து வருகின்றனர்.அது அவர்கள் பாடு, ரஜினி பாடு. ஆனால் ஜக்கி வாசுதேவ் என்னும் அந்த சாமியார், தமிழ் நாட்டில் கோவை வனப் பகுதியில் யானைகளின் வழித்தடத்தில் மாபெரும் கட்டடங்களைக் கட்டிவைத்து இயற்கையை, வனத்தைச் சீரழிக்கும் ஒரு குற்றவாளி. அவர் நடத்தும் சிவராத்திரி விழாவுக்குப் பிரதமர் போகிறார்.பிரதமரின் பதவியேற்பு விழாவுக்கு ஜக்கிக்கு அழைப்பு வருகிறது. ஆனால், நாடாளுமன்றத்தில், மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சியின் தலைவரை அழைக்கப் பிரதமருக்கு மனம் இருக்காது. இது பாஜகவின் கட்சி விழாவாக இருந்திருந்தால் நாம் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை. ஆனால் இந்த நாட்டின் 120 கோடி மக்களையும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆளப்போகும் பிரதமர் பதவி ஏற்கும் விழாவுக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்று பார்த்து அழைப்பது எப்படிச் சரியாகும்? இது ஜனநாயகத்திற்கு எதிரானது. அவர்களின் சிறுமதியைத்தான் வெளிப் படுத்துகிறது. நமது கவலை எல்லாம், இப்படிப்பட்ட ஒரு பிரதமரின் ஆட்சியில் நாடு என்ன பாடுபடப் போகிறதோ என்பதுதான்.

பொதுவாகவே வடநாட்டு அரசியல் தலைவர்கள் பெருந்தன்மையுடனும், அரசியல் கடந்த நட்புடனும் நடந்து கொள்வார்கள் என்று சொல்வார்கள்... தமிழ்நாட்டில்தான் அத்தகைய போக்கைக் காண முடியாது என்பார்கள். அத்தகைய அநாகரிகப் போக்கு இங்கு நிலவுவதற்கு என்றைக்கும் திமுக காரணமாக இருந்தது இல்லை. ஆனால் திமுக தோழர்களுடன் நட்பு பாராட்டியதற்காக அதிமுகவினர் அநேகம் பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர். அப்படி நடவடிக்கை எடுத்து அரசியல் அநாகரிகத்தை வெளிப்படுத்தியவர் அம்மையார் ஜெயலலிதா. அரசியல் காழ்ப்புணர்வு கொண்ட அம்மையார் ஜெயலலிதா மறைந்து விட்டார் என்றிருந்தோம். ஆனால் அவர் ஆண் ஜெயலலிதாவாக, நரேந்திர மோடியின் வடிவில் இன்னமும் உயிர் வாழ்வதைப் பார்க்கிறோம்.

> “கொளத்தூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் மு.க.ஸ்டாலினை அழைக்கவேண்டும் என்று கூறவில்லை. மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சியான திமுகவின் தலைவர் தளபதிஸ்டாலின் அவர்களை அழைக்க வேண்டும்.”



அரசியல் பெருந்தன்மை என்ன என்பதை, சென்னை மாநகராட்சியின் சார்பில் தனக்குச் சிலை வைப்பதாகச் சொன்ன தனது கட்சி மேயரிடம், " எனக்குச் சிலை வேண்டாம், கல்வி வள்ளல் காமராசருக்குச் சிலை வையுங்கள்" எனச் சொன்ன அறிஞர் அண்ணா அவர்களிடம் தெரிந்துகொள்ளட்டும். அதே காமராசர்அவர்கள் 1971 தேர்தலுக்குப் பின் உதகை "தமிழகம் மாளிகை"யில் ஒரு மாதம் தங்கி ஓய்வெடுக்க முதல்வர் கலைஞரிடம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராசாராம் நாயுடு அனுமதி கேட்ட போது, "காமராசர் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் தலைவர் இல்லை, தமிழக மக்களின் தலைவர். அவர் ஒருமாதம் அல்ல, எவ்வளவு காலம் வேண்டுமானாலும் உரிமையோடு அரசு விருந்தினராக அங்கு தங்கலாம்" என்று கூறிய தலைவர் கலைஞரிடம் தெரிந்து கொள்ளட்டும்.

கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, தமிழகச் சட்டமன்றத்தில், ஒரு பிரச்சனையில் அதிமுகவினர் வெளிநடப்பு செய்து விட்டு வெளியேறி விடுகின்றனர். அதன்பின் மின்சாரத்துறை தொடர்பான ஒரு முக்கிய விவாதம் நடைபெற வேண்டும். அதில் விவாதிக்க அதிமுகவினர் பெரும் ஆர்வத்துடன் இருந்தனர். இப்போது அதிமுக உறுப்பினர்கள் மன்றத்தில் இல்லையே என்று கருதிய முதல்வர் கலைஞர், தளபதி அவர்களையும், மூத்த அமைச்சர்கள் கோசி மணி, வீரபாண்டி ஆறுமுகம், கா.நா.நேரு ஆகியோரையும் அனுப்பி எதிக்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இருக்கும் அதிமுக உறுப்பினர்களை அழைத்துவரச் சொன்னார். அவர்கள் அவர்களின் தலைவியைக் கேட்காமல் வர முடியாது. அவர் அனுமதி பெறக் காலதாமதமாகி விடும் என்பதால் வரவில்லை என்பது வேறு.

ஆனால் எதிர்க்கட்சியினர் இல்லாமல் சபையை நடத்தக்கூடாது. அவர்கள் சபைக்கு வந்து விவாதத்தில் பங்கேற்க வேண்டும் என்று கருதிய அரசியல் நாகரிகத்துக்குச் சொந்தக்காரர் முதல்வர் கலைஞர். ஜனநாயக மரபுகளைப் பேணி பாதுகாக்கக் கலைஞர் மேற்கொண்ட முயற்சி அது. அப்படிப்பட்ட அரசியல் நாகரிகங்களை பாஜகவினரிடமும், பிரதமர் நரேந்திர மோடியிடமும் எதிர்பார்ப்பது வீண். எட்டி மரத்தில் மாம்பழங்களை எதிர்பார்ப்பது நமது குற்றம்தான். ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**


டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162








தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இன்று இஸ்ரேல், நாளை தமிழகம்?




மத்தியப்பிரதேசம், கர்நாடகம் உள்ளிட்ட பல மாநிலங்கள் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கே அரசு வேலையில் முன்னுரிமை என்பதை உறுதி செய்யும் வகையில் சட்டம் கொண்டு வந்துள்ளது.

ஆனால் வந்தாரை வாழவைக்கும் தமிழகம் என்று சொல்லிக் கொண்டே தமிழகத்தைத் திறந்த மடமாக்கிவிட்டார் எடப்பாடி பழனிச்சாமி.

ஏற்கனவே தொடர்வண்டி, அஞ்சலகம் உள்ளிட்ட மத்திய அரசுப் பணியிடங்களில் வடநாட்டவர் தமிழர்களைவிட அதிகமாக நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு தமிழக அரசும், அரசு மருத்துவமனைப் பணிகளில் வடநாட்டவர்களைப் பெருமளவு நிரப்பிக் கொண்டிருக்கிறது.

தற்போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம் மூலம் தேர்வு முறையில் பொறியாளர்களைத் தேர்வு செய்தது. அதில் மொத்தப் பணியிடங்களில் 12.5% ஆந்திரம், கேரளம், கர்நாடகம், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலத்தவர்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஏறத்தாழ 90 லட்சம் பேர்கள் பதிவு செய்து, காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இயந்திரப் பொறியாளர் துறைக்கு 219 பேர் தேவை என்ற நிலையில், 67 பேர் பொதுப்பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் 47 பேர் வெளிமாநிலத்தவர்கள். அதாவது, 68 விழுக்காடு.

தொழில் துறையில் தமிழ்நாடு முன்னேறிக்கொண்டிருக்கிறது என்று வாய் கூசாமல் தமிழக அதிமுக அமைச்சர்கள் என்னதான் சொல்லிக்கொண்டிருந்தாலும் உண்மை வேறாக இருக்கிறது.

தொழில்துறையில் தமிழ்நாடு பின்தங்கி இருப்பதோடு, வேலைவாய்ப்புகளிலும் தமிழர்கள் புறக்கணிக்கப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதன் பின்விளைவுகள் மோசமாக இருக்கும்.

பாலஸ்தீனத்தை இஸ்ரேலியர்கள் ஆக்கிரமித்து, தன்வயப்படுத்திப் பின்னர் பாலஸ்தீனியர்களை அப்புறப்படுத்தியது வரலாறு.

நாளை தமிழகமும் வடவர்கள் கையில் போய்விடாது என்பதற்கு என்ன உத்திரவாதம்.

# ஆட்சியைக் கைப்பற்றியது ‘பா.ஜ.க’

# அமைச்சரவையைக் கைப்பற்றியது ‘பார்ப்பனர்கள்’

● மா.உதயகுமார்

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைப் பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது பா.ஜ.க.

இப்படி ஒரே வரியில் பா.ஜ.க ஆட்சி அமைத்ததைச் சொல்லிவிடுகிறோம். ஆனால் இனி நடைபெறவிருக்கும், இந்த ஆட்சியின் அக்கிரமங்களைப் பக்கம் பக்கமாக எழுத வேண்டுமே. அதில் முதல் பக்கத்தை அமைச்சரவைப் பட்டியலில் இருந்து தொடங்க வேண்டியிருக்கிறது.


இந்த அமைச்சரவை மக்கள் பயன்பெறுவதற்காக அமைக்கப்பட்டதா? அல்லது மக்களைப் பயமுறுத்துவதற்காக அமைக்கப்பட்டதா?

தேர்தல் முழுக்க ‘இந்து’ மக்களின் மீது மிகுந்த அக்கறை கொண்டவர்கள் போல் நாடகமிடுவது. ஆனால் அமைச்சரவையில் முக்கிய பொறுப்புகளைப் பார்ப்பனர்கள் தாங்களே எடுத்துக் கொள்வது. 25 அமைச்சர்களில் 9 பேர் பார்ப்பனர்கள். பாராளுமன்றமா அல்லது பார்ப்பனர் மன்றமா? ஆட்சியைப் பா.ஜ.க கைப்பற்றியது. ஆனால் அமைச்சரவையைப் பார்ப்பனர்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். ‘இந்து’ என்று சொல்லி ஏமாற்றப்படும் மக்களே தயவு செய்து நீங்கள் பார்ப்பனர் அல்லாதோர் என்பதை உணருங்கள்.

ஒரே நாடு என்று உரிமை கொண்டாடுபவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்த மூவரை மட்டுமே அமைச்சர்களாகியிருக்கின்றனர். அந்த மூவரும் யார் என்றால் நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர், சதானந்த கவுடா. இதில் நிர்மலா சீதாராமனும், ஜெய்சங்கரும் தமிழ்நாட்டைப் பூர்விகமாகக் கொண்டவர்கள் தான். இவர்கள் தென்னிந்திய நலனுக்காக உழைப்பவர்களா என்று பார்த்தால் அதுவும் இல்லை.

ஒரே நாடு என்று அவர்கள் உரிமை கொண்டாடுவது எல்லாம் தென்னிந்தியாவின் வளர்ச்சியில் குளிர்காய்வதற்குத் தான். தென்னாட்டு மக்களே, திராவிடர் இனத்தை இழிவு செய்யும் ஆரிய ஆதிக்கத்தை அறிந்திடுங்கள்.

ஆரியப் பார்ப்பன ஆட்சியின் அமைச்சரவை என்பது அதிகார வேட்டைக்காக அமைக்கப் பட்டது. இந்த அதிகார வேட்டைக்குத் தலைமை ஏற்றிருப்பவர்கள் தான் மோடியும், அமித்ஷாவும். இப்போதே கர்நாடகத்தில் ஆட்சி கவிழும் என்று எடியூரப்பா நம்பிக்கையோடு பேசி வருகிறார். மேற்கு வங்கத்தில் திரிணமுல் காங்கிரசில் குழப்பம் விளைவித்து கட்சி மாறி வருகின்றனர். இவர்கள் தேர்தலில் மட்டும் நேர்மையாகவா வெற்றி பெற்றிருப்பார்கள்?



10 ஆண்டுகளுக்கு முன் பா.ஜ.கவில் இணைந்த நிர்மலா சீதாராமன், தேர்தலில் போட்டியிடாத நிர்மலா சீதாராமன், சென்ற அமைச்சரவையில் பாதுகாப்புத் துறை அமைச்சர், தற்போது நிதியமைச்சர். பார்ப்பனர்களின் வளர்ச்சியைப் பாரீர்! இந்தியாவில் நிர்மலா சீதாராமனைத் தவிர இந்தப் பத்து ஆண்டுகளில் வேறு யாரும் இப்படிப்பட்ட வளர்ச்சியைப் பெற்றிருக்கமாட்டார்கள். அவர்கள் நாட்டின் வளர்ச்சி பற்றிப் பேசுவதெல்லாம் பார்ப்பனர்கள் வளர்ச்சிக்காக மட்டுமே.

யாருமே எதிர்பாராத வண்ணம், முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலாளர், மோடியின் கட்டளைகளை நிறைவேற்றுபவர், ஆனால் பா.ஜ.கவில் இல்லாதவரான ஜெய்சங்கர் வெளியுறவுத் துறை அமைச்சராக்கப்பட்டிருக்கிறார். பா.ஜ.க வில் உள்ளவர்கள் கூட இதனையெல்லாம் தட்டிக் கேட்க முடியாது. பா.ஜ.க.வில் இருக்கும் பார்ப்பனர் அல்லாதோரே, நீங்கள் பாடுபடுவதெல்லாம் பார்ப்பனர்களின் உயர்வுக்குத் தானே அன்றி வேறு எந்த ஒன்றிற்காகவும் அன்று.

சென்ற அமைச்சரவையைப் போலவே, மதவாதிகளால் இந்த அமைச்சரவையும் அமைக்கப்பட்டிருக்கிறது. மதவாதிகளாக அமைச்சர்கள் இருந்தால் மக்கள் மனிதர்களாக வாழமுடியாது. மதம் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் பாயும், மனிதவளம் வளராது தேயும்.

நாம் எதை வேண்டுமானாலும் இழக்கலாம் ஆனால் சுயமரியாதையையும், மனிதவளம் - கல்வியையும் இழந்து விடக்கூடாது.

இப்படிக் கேட்பாரின்றி கட்டவிழ்த்துவிடப்படும் பார்ப்பன ஆதிக்கத்தைப் பதம் பார்க்கும் இயக்கம் இந்தியாவில் இருக்கிறதென்றால் அது திராவிட இயக்கம் ஒன்றுதான். திராவிட இயக்கம் நேரடியாகத் தேர்தல் அரசியலில் ஈடுபடாத போதே, இந்திய அரசியலமைப்பின் முதல் சட்டத் திருத்தம் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தது என்பதை நாம் டில்லியில் இருப்போர்க்குச்சொல்லி வைப்போம். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.